# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

## இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2025

இலங்கை விஞ்ஞான சேவையின் அனுமதிக்கப்பட்ட பதவிகள் நிலவும் அமைச்சு/திணைக்களங்களில் இலங்கை விஞ்ஞான சேவையின் III தரத்தின் பதவிகளில் நிலவும் 23 வெற்றிடங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சைக்காக தகைமையுடைய அரசாங்க சேவை ஆணைக்குழுவில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

இதன் பொருட்டான விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப் பப்படிவங்களை நிகழ்நிலை (Online) முறையினால் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப் பங்கள் 2025, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி 09.00 இற்கு

ஆரம்பிக்கப்படுவதுடன் 2026 சனவரி மாதம் 23 ஆந் திகதி 21:00 மணிக்கு முடிவுறுத்தப்படும். அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

01. இப்பரீட்சை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் செய்யப்படும் நியமனங்களின் கீழ், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026 ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடைபெறும். நாட்டில் ஏற்படக் கூடிய நிலைமைகளின் மீது மட்டும் பரீட்சை நாடு பூராகவும் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எவ்வாறாயினும், ஏதேனுமொரு பரீட்சை நிலையத்திற்குப் போதுமானளவில் விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கையினர் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் அந்நிலையத்திற்கு விருப்பம் தெரிவித்துள்ள விண்ணப்பதாரர்கள் வேறு பரீட்சை நிலையத்திற்கு முன்வைக்கப்படுவர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமனங்களுக்கு உட்பட்டு இப்பரீட்சையை நிராகரிப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்குப் பரீட்சைகள் ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

இவ் அறிவித்தலில் "நியமன அதிகாரி" எனக் கருதப்படுவது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவாகும்.

02. ஆட்சேர்ப்பு செய்யும் முறை: எழுத்து மூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை பெறு பெறுபேறுகளின் பேரில்

2.1 **விருப்பத்தைக் குறிப்பிடல் :**

ஒவ்வொரு பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் பூர்த்தி செய்திருப்பின், விண்ணப்பதாரரொருவருக்கு பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு இயலுமை உண்டு. விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரிகளினால் ஒவ்வொரு பதவிக்காகவும் தமது விருப்ப ஒழுங்குவரிசையை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடல் வேண்டும்.

**கவனத்தில்கொள்ளவும்:** ஒருபதவியினைவிடவும் கூடுதலான எண்ணிக்கைக்கு விண்ணப்பிக்கும் போது, விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்படும் விருப்ப ஒழுங்குவரிசையை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரியினால் விருப்பம் குறிப்பிடப் படாதுள்ள பதவிகளுக்கு நியமனத்தை பெறுவதற்கு செய்யப்படும் கோரிக்கைகள் எக்காரணத்தின் பேரிலும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

2.2 **எழுத்து மூலப் பரீட்சை :** இப்போட்டிப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| வினாத்தாள் | காலம் | ஆகக் கூடிய புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| 1. பாடவிதானம் தொடர்பான அறிவு | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |

**கவனத்தில் கொள்ளவும் :** நுண்ணறிவு வினாத்தாள் அனைத்து திணைக்களங் களுக்குமான பொது வினாத்தாள் என்பதுடன் பாடவிதானம் தொடர்பான அறிவு வினாத்தாள் ஒவ்வொரு திணைக்களத்திற்குரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்படும் பல்தேர்வு, குறுகிய எழுத்துமூலமான மற்றும் அரை-கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாக அமையும்.

2.3 **நேர்முகப்பரீட்சை :**

எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில், ஒவ்வொரு வினாப்பத்திரத்தின் பொருட்டு 40% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த விண்ணப்ப தாரர்களின் புள்ளிகளின் திறமையின் ஒழுங்கு வரிசையின்படி நேர்முகப்பரீட்சைக்கு உட் படுத்தப்பட்டு, தகைமைகள் உறுதிப்படுத்தும் விண்ணப்பதாரர்களை ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர். நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் படும் என்பதுடன், விண்ணப்பதாரர்களின் தகைமைகள் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் பரீட்சித்துப் பார்க்கப் படும். ஒவ்வாரு பதவிக்கும் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்று அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

2.4 ஒவ்வொரு பதவிகளுக்கும் ஏற்புடைத்தானவாறு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பு மற்றும் எழுத்து மூலப் பரீட்சையின் புள்ளிகளின் மொத்தத்தின் திறமையின் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் ஒவ்வொரு பதவிகளின் பொருட்டு நியமனம் செய்யப்படும்.

திறமை ஒழுங்குவரிசைக்கு ஏற்ப வெற்றிடங்களை நிரப்பும் போது, ஏதேனுமாரு சந்தர்ப்பத்தில் மிகுதியாவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குக் கூடுதலான எண்ணிக்கையில் சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள, தகைமையுடைய பரீட்சார்த்திகள் இருப்பின் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான சேவைகளின் தேவைப்பாடு அச்சந்தர்ப்பத்தின் போது நிலவுமாயின், அவ்வாறு சம புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள பரீட்சார்த்திகளில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களிடையே இருந்து மேலதிகமாக தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படலாம். இத்தெரிவு நடைமுறை பின்வருமாறு இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

I. பரீட்சார்த்திகளின் ஆற்றலை மதிப்பிடலின் பொருட்டான எழுத்து மூலப் பரீட்சை
II. திறமையின் அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை

எழுத்து மூலப் பரீட்சை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படும். நேர்முகப்பரீட்சை சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

இத்தெரிவு நடைமுறையின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பான மேலதிகத் தகவல்கள் www.psc.gov.lk என்னும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இணையப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

முதற் பக்கம் → பதிவிறக்கம் → நடைமுறை → விசேட தெரிவு நடைமுறை

2.5 ஒவ்வொரு பதவியின் பொருட்டு நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். உரிய பதவியின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்றவாறு பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகளின் ஒழுங்குவரிசை மற்றும் வழங்கப்பட்டுள்ள விருப்பு என்பன கண்டிப்புடன் அவதானம் செலுத்தப்பட்டு நியமனம் மேற்கொள்ளப்படும். ஏதேனும் பதவியொன்றில் சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு அல்லது வெற்றிடங்களின் பகுதியொன்றை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

03. **வெற்றிடங்களின் எண்ணிக்கை**: 23

வெற்றிடமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கை அப் பதவிகளுக்குரிய அமைச்சு/ திணைக்களங்களுக்கமைய மேலும் பிரிக்கப்பட்டுள்ள விதம் இவ் அறிவித்தலின் 6.2 இன் கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

04. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

4.1. அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், 1877/27 என்னும் இலக்கமுடைய 2014.08.28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைகள் பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளுக்கும், ஏற்புடையவாறு திணைக்களத்தின் ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கும், 2310/29 என்னும் இலக்கமுடைய 14.12.2022 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், (இதன் பின்னர் செயற்பாட்டு நடைமுறை விதி என அறிமுகப்படுத்தப்படும்), ஒவ்வொரு பதவிகளுக்கும் உரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளுக்கும். மேற்படி நியமங்கள், நிபந்தனைகள், ஒழுங்குவிதிகள், ஏற்பாடுகள், விதிமுறைகளுக்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படக் கூடிய திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் உரிய பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

4.2. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையதுமாகும். ஓய்வூதிய முறை தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர் இணங்கியொழுகுதல் வேண்டும். விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் முறையில் தங்களினால் அதன் பொருட்டு பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும்.

4.3. இப் பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட பதில்

கடமையாற்றுவதற்கு உட்படுவதுடன் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று வருட (03) காலத்திற்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.4. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இணைந்த வகையிலான சுற்றறிக்கைகளின் பிரகாரம் பதவிக்குரிய மட்டத்தின் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.5. நியமனம் பெறுபவர் நாட்டினுள் நியமிக்கப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்று வதற்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4.6. தமக்கு வழங்கப்படும் பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் / அல்லது நியமிக்கப்படும் பதவியின் அல்லது நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கும் அல்லது தவிர்க்கும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

05. **சம்பள அளவுத்திட்டம் :**

25.03.2025 ஆந் திகதிய 10/2025 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கமைய, இப்பதவிகளுக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 82150 - 10 x 2400 - 8 x 2940 – 17 x 3900 – ரூ. 195970.00 (SL–1–2025) என்பதுடன் அச்சம்பளம் கிடைக்கப் பெறுவது 2027.01.01 ஆந் தினத்திலிருந்தாகும். அதுவரையில் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை III இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் செலுத்தப்படும் வேறு படிகளும் உரித்தாகும்.

06. **ஆட்சேர்ப்பு தகைமைகள் :**

6.1 **பொதுவான தகைமைகள் :**

i. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல்.

ii. இலங்கையினுள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் போன்று தமது பதவியின் வகிபாகம் மற்றும் கடமைப் பணிகளை நன்றாக நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதியுடையவராகவிருத்தல்.

iii. தகைமையை பரீட்சிக்கும் தினத்திற்கு முன்னரான 05 வருடத்திற்குள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

iv. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்று பெற்றுக் கொள்ளாதிருத்தல் வேண்டும்.

v. எழுத்துமூலமான பரீட்சைக்கு இரண்டு தடவைக்கு மேலாக தோற்றாத ஆளாகவிருத்தல் வேண்டும்.

vi. ஆட்சேர்ப்பின் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு சகல விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

6.2 **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

| *தொடர் இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 01 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,<br>(அ) தாவரவியல் மற்றும் உயிரியல் அல்லது வேளாண் அறிவியல் தொடர்பான பட்டத்துடன் கூடிய குறைந்தபட்சம் 05 வருடங்கள் முனைப் பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள MN 4 சம்பள குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தராகவிருத்தல்.<br>அல்லது |

| *தொடர் இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 01 | (ஆ) தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் சேவையாற்றும் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தரம் I ற்கு தரமுயர்வு பெற்று தரம் I இல் குறைந்தபட்சம் 05 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ள<br><br>அல்லது<br><br>(இ) தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக் களத்தில் சேவையாற்றும் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தர உத்தியோகத்தராகவிருத்தல் |
| 02 | அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 02 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து, பௌதீக விஞ்ஞானம் பாடமாக உள்ளடங்கிய விஞ்ஞானமாணி பட்டமொன்றை பெற்றிருத்தல்<br><br>மற்றும்<br>(அ)<br>i. அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தில் அளவீட்டு அறிவியல் பரிசோதனை உத்தியோகத்தராகவிருத்தல்.<br><br>ii. உரிய பதவியில் 10 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.<br><br>iii. தகைமையை கவனம் செலுத்தும் தினத்திற்கு முன்னரான 05 வருடங்களுக்குள் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br><br>(ஆ)<br><br>i. அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தில் அளவீட்டு விசாரணை உதவி உத்தியோகத்தராகவிருத்தல்.<br><br>ii. உரிய பதவியில் 10 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br><br>iii. தகைமையை கவனம் செலுத்தும் தினத்திற்கு முன்னரான 05 வருடங்களுக்குள் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br><br>அல்லது |

| தொடர் இலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (இ)<br>i. உதவி அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் கண்காணிப்பு உத்தியோகத்தராகவிருத்தல்.<br>ii. அளவீட்டு சேவை மற்றும் முறைமைகள் பரிசோதனை உத்தியோகத்தராக சேவைக்காலமும் உட்பட 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br>(ஈ)<br>i. இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் அளவீட்டு சேவை மற்றும் கருவிப் பரிசோதகர் அல்லது ஆய்வுகூட உதவி உத்தியோகத்தராகவிருத்தல்.<br>ii. இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br>iii. தகைமையை கவனம் செலுத்தும் தினத்திற்கு முன்னரான 05 வருடங்களுக்குள் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br>(உ)<br>i. இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்தின் அளவீட்டு சேவை மற்றும் கருவிப் பரிசோதக உத்தியோகத்தராகவிருத்தல்.<br>ii. தகைமையை கவனம் செலுத்தும் தினத்திற்கு முன்னரான 05 வருடங்களுக்குள் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 03. | வளிமண்டலவியல் திணைக்களம் | வளிமண்டல வியலாளர் | 03 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,<br>(அ) பௌதீக விஞ்ஞானம் அல்லது கணிதம் தொடர்பாக விஞ்ஞானமாணி விசேட/ கௌரவ பட்டமொன்றை பெற்றிருத்தல் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் (பயிற்சிக் காலத்தைத் தவிர) 15 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br>(ஆ) பௌதீக விஞ்ஞானம் அல்லது கணிதம் பாடம் உட்பட விஞ்ஞானமாணி சாதாரண பட்டமொன்றை பெற்றிருத்தல் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் (பயிற்சிக் காலத்தைத் தவிர) 15 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |

| *தொடர் இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 04 | வன பாதுகாப்புத் திணைக்களம் | உதவி வனப் பாதுகாவலர் (வன முகாமைத்துவம்) | 03 | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திற்குரிய கட்டுப்பாட்டு உத்தியோகத்தராகவிருத்தல். |
| 05 | வன பாதுகாப்புத் திணைக்களம் | உதவி வனப் பாதுகாவலர் (ஆராய்ச்சி) | 01 | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திற்குரிய கட்டுப்பாட்டு உத்தியோகத்தராகவிருத்தல் |
| 06 | வன பாதுகாப்புத் திணைக்களம் | உதவி வனப் பாதுகாவலர் (கல்வி) | 01 | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திற்குரிய கட்டுப்பாட்டு உத்தியோகத்தராகவிருத்தல் |
| 07 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 03 | (அ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்துடன் அச்சேவையில் தரம் I இல் அல்லது விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல்.<br>அல்லது<br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவன மொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து வேளாண் அறிவியல் அல்லது விஞ்ஞானமாணி பட்டமொன்றுடன் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 08 | நீர்ப்பாசனத் திணைக்களம் | நீரியல் தரவு உத்தியோகத்தர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் நீரியல் உதவி யாளர் பதவியின் விசேட தரத்தின் உத்தி யோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 09 | நீர்ப்பாசனத் திணைக்களம் | பொறியியல் பொருட்கள் உத்தியோகத்தர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் பொறியியல் பொருட்கள் பிரிவில் பரிசோதனை உதவியாளர் பதவியின் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 10 | நீர்ப்பாசனத் திணைக்களம் | சிவில் பொறியியல் பொருள் பரிசோதக உத்தியோகத்தர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் சிவில் பொறியியல் பொருட்கள் பரிசோதனை பதவியில் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |

| *தொடர் இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 11 | நீர்ப்பாசனத் திணைக்களம் | நீர் வலு உத்தியோகத்தர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் நீர் வலுப் பிரிவில் பரிசோதனை உதவியாளர் பதவியில் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 12 | நீர்ப்பாசனத் திணைக்களம் | காணி பாவனை உத்தியோகத்தர் | 02 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் நீரியல் உதவியாளர் பதவியில் அல்லது மண் பரிசோதகர் பதவியில் அல்லது உதவி பரிசோதகர் (சாதாரணம்) பதவியில் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 13 | நீர்ப்பாசனத் திணைக்களம் | மண் வள பரிசோதகர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் மண் பரிசோதகர் பதவியில் அல்லது உதவிப் பரிசோதகர் (சாதாரணம்) பதவியில் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 14 | நீர்பாசனத் திணைக்களம் | உபகரண உத்தியோகத்தர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் நீர் வலு பரிசோதனைகூடத்திற்கு தொடர்புள்ள உபகரண பிரிவின் பரிசோதனை உதவியாளர் பதவியின் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 15 | தொல்பொருளியல் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (இரசாயன பாதுகாப்பு) | 01 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பட்டமொன்றை பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>தொல்பொருளியல் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தரம் I இல் 05 வருட திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தராகவிருத்தல் மற்றும் இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல். |

07. **பரீட்சை நிபந்தனைகள்:**

7.1 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் மட்டும் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் விரும்பிய ஒரு மொழி மூலத்தில் பரீட்சையின் பொருட்டு தோற்றலாம். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பொருட்டு தம்மால் விண்ணப்பிக்கும் பதவிகளுக்குரியதான சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், அதன் பொருட்டு ஒரு மொழி மூலத்தை மட்டும் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்குச் சுய விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

7.2 நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழி மூலம் மட்டும் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை (Online) மூலம் முன்வைக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுரைப் பத்திரத்தைப் (Common Instruction) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது, இவ் அறிவுரைகளைக் கண்டிப்புடன் கடைப்பிடிக்கவும். நிகழ்நிலையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைத் தனது தனிப்பட்ட கோப்பில் உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காகப் பின்னர் விடுக்கப்படும் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எத்தகைய பாதகமான நிலைமையொன்றினை விண்ணப்ப தாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

7.3 இப்பரீட்சையின் பொருட்டு பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை அமைப்பின் மூலம் வழங்கப்படும் கீழ்க் குறிப்பிடப்படும் கட்டணம் செலுத்தப்படும் வழிமுறையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கி அட்டையின் மூலமும் (Any Bank Credit Card)
ii. இணையத்தளக் கொடுப்பனவு வசதிகள் உள்ள எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the facility of internet transaction)
iii. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறையின் மூலம் (Online Banking method of bank of Ceylon)
iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the bank of Ceylon)

**குறிப்பு** : மேற்படி முறைகளின் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை தொடர்பான அறிவுரைகள் www.doenets.lk என்னும் இணையதளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாகக் குறுந்தகவலொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு விதித்துரைக்கப்பட்டுள்ள பணத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது, ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூறமாட்டாது. பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படுவதற்கு அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றுவதற்கு இயலாது.

7.4 விண்ணப்பதாரி தாம் வைத்துக் கொள்ளும் விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியில் மற்றும் பரீட்சையின் பொருட்டான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் தாபனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் மூலம் சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

7.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளதாக ஊகித்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அன்றைய திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பங்களை சரியான முறையில் நிகழ்நிலை மூலம் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலையின் மூலம் மாத்திரமே வெளியிடப்படும் அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன், அது பற்றி குறிப்பிடப்படும் அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் மூலம்/விண்ணப்பதாரிக்கு குறுந்தகவல் மூலம் அறிவிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது,

விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றை இணைய அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பித்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனுமொரு தகவலை உறுதிப் படுத்திக்கொள்ளும் பொருட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியையும் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுசீட்டின் அச்சுப்பிரதியையும் வைத்திருப்பதும் பயனுள்ளதாக அமையும். பரீட்சை அனுமதி அட்டையைப் பரிசோதித்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் போதிய கால அவகாசத்துடன் பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு, விண்ணப்பத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களைச் செய்து கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்கள் கோரி முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு : அனுமதி அட்டையின்றி பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்செல்வதற்கு இடமளிக்கப்படாது. பரீட்சை ஆரம்பிக்கும் திகதி பரீட்சைகள் மண்டபத்தின் பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணமானது தங்கள் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ள அனுமதி அட்டையை மட்டு மேயாகும். பரீட்சார்த்தியொருவருக்குப் பரீட்சை கள் அனுமதி அட்டையொன்று வழங்கப் படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்று வதற்கு அல்லது பதவியின் பொருட்டு தகை மைகள் கொண்டுள்ளதாக ஏற்றுக் கொண்டுள்ள தாகக் கருதுதலாகாது.

7.6 விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது அப் பதவிக்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாகக் கருதப்படக் கூடாது.

7.7 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் சான்றுரைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை நிறுவனத்தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் சான்றுரைப்படுத்துதல் வேண்டும்.

7.8 பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்

7.9 பரீட்சை நடாத்துதல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சையின் பரீட் சார்த்திகள் இணங்கியொழுகுதல் வேண்டும். அச் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் தண்டனைக்கு கீழ்ப்படிவதற்கு அவருக்கு அல்லது அவளுக்கு நேரிடும். பரீட்சை முடிவுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

7.10 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களின் பொருட்டும் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பதிகாரி திருப்பதியடையும் வகையில் தமது சுய ஆளடை யாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும். அதற்காக செல்லுபடியாவது பின்வரும் ஆவணங்கள் மட்டுமேயாகும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடை யாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டும் மூடியிருக்காதவாறு பரீட்சைகள் மண்டபத்திற்குள் உட்செல்லுதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்ப தாரிகள் பரீட்சைகள் மண்டபத்திற்கு உட் செல்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்சென்ற நேரம் தொடக்கம் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாதிருத்தல் வேண்டும்.

08. **தவறான தகவல்கள் வழங்குவதற்கான தண்ட னைகள்:**

பரீட்சார்திக்குத் தகைமைகள் இல்லை எனத் தெரியவருமாயின், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவனது/ அவளது பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது என தெரிந்து கொண்டு சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருமாயின், அவ்வாறு இல்லையெனில் ஏதேனுமொரு

முக்கியமான விடயம் அவர் வேண்டும் என்று மறைத்துள்ளதாக நியமனம் பெற்றுக் கொண்டதன் பின்னர் தெரியவருமாயின் அவரது நியமனம் இரத்துச் செய்யப்படும் என்பதுடன், உரிய நியமனத்தின் கீழ் சம்பளம் மற்றும் படிகள் என அரசு/ மாகாண அரசினால் செலுத்தப்பட்டுள்ள சகல பணமும் அறவிடப்படும்.

09. **பரீட்சை மொழி மூலம் :**

i. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

ii. பரீட்சைக்குத் தோற்றும் மொழி நியமன மொழியாகக் கருதப்படும்.

iii. பரீட்சார்த்தி பரீட்சையின் போது தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் பதில்கள் வழங்குதல் வேண்டும்.

iv. தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்குப் பரீட்சார்த்திக்கு இடமளிக்கப் படாது.

10. நியமன அதிகாரி மூலம் பெறுபேறுகளை வெளியிடு வதற்கு பொருத்தமான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள் / மொத்தப் புள்ளிகளைக் குறிப் பிட்ட பெறுபேற்றுக் குறிப்பொன்று பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர் களுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results. exams.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக பெறு பேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

11. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாதுள்ள விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உரித்தானதாகும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ் அறிவித்தலில், மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தமின்மைகள் அல்லது முரண்பாடுகள் உள்ளதாகத் தெரியவருமாயின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் படி,

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025.12.20.

12-615